**An excerpt from அம்மு**

அடுத்த நாள் காலை, தந்தை எழுந்தவுடன் ஆதவனை தேடினார். அவனது கைப்பேசிக்கு அழைத்தார், ஆனால் கைப்பேசி அணைக்கப் பட்டிருந்தது. காலை எழுந்து கல்லூரிக்கு சென்றிருப்பான், மாலை எப்படியும் வீடு திரும்பி விடுவான் என்று நினைத்து அலுவலகத்திற்கு கிளம்பினார்.

மாலை வீடு திரும்பியவுடன் ஆதவனை தேடினார், வீட்டிலில்லை என்றவுடன் மீண்டும் கைப்பேசியில் அழைத்தார். கைப்பேசி இன்னும் அணைக்கப்பட்டிருந்ததால் படபடப்பானார். ஆதவனின் நெருங்கிய நண்பனுக்கு அழைத்தார், அவன் கல்லூரிக்கும் வரவில்லை என்றறிந்தவுடன் அப்பாவிற்கு ஒருவித பயம் தொற்றிக்கொண்டது.

அவருக்கு என்ன செய்வதென்று தெரியாமல், தலையை பிடித்துக்கொண்டு அமர்ந்திருந்தார். மறுபடியும் கைப்பேசியில் தொடர்பு கொள்ள முயற்சி செய்தார், இன்னமும்

அணைக்கப்பட்டிருந்ததால், இதற்கு மேலே நேரம் கடத்துவது சரியல்ல என நினனத்து அருகிலுள்ள காவல் நிலையம் நோக்கி விரைந்தார்.

காவல் நிலையத்தின் வாசலை அடைந்து உள்ளே நுழையுமுன் , ஆதவனிடம் இருந்து அழைப்பு வந்தது. நீண்ட பெருமூச்சுடனும் எதிர்பார்ப்புடனும் அழைப்பை எடுத்தார்

“அப்பா, உங்க கிட்ட கொஞ்சம் நேர்ல பேசணும்”

“ஆதவா ! thank god ! எங்கப்பா இருக்க, ஏன் போன் எடுக்கல , சொல்லாம எங்க போன, அப்பா பயந்துட்டேன்”

“எனக்கு வேற என்ன பண்றதுன்னு தெரியல பா , உங்கள நேர்ல பாத்து பேசனும் கொஞ்சம் வர்றீங்களா “

“நீ வீட்டுக்கு வாப்பா , பேசலாம் ... இப்ப நீ எங்க இருக்க சொல்லு “

“இல்ல , நீங்க ஜூரோங் பாயிண்ட் ஸ்டார் பக்ஸ் வாங்க , நான் அங்க தான் இருக்கேன் “

“ஜூரோங் போயிண்டா அங்க எதுக்குப்பா போன “

“நான் இன்னும் ஒரு மணி நேரம் இங்க காத்திருப்பேன் , நீங்க வரலேனா மறுபடியும் என்ன தேட வேண்டியிருக்கும்”

“சரி சரி நீ அங்கேயே இரு , கெளம்பிட்டேன் , வந்துட்டிருக்கேன்” என்று அழைப்பை துண்டித்து விட்டு , டாக்ஸி ஏறி ஜூரோங் பாயிண்ட் நோக்கி விரைந்தார். போகும் வழியிலெல்லாம் , தான் வந்து கொண்டே இருப்பதாக ஐந்து நிமிடத்திற்கு ஒரு முறை குறுந்தகவல் அனுப்பிக்கொண்டே இருந்தார்.

ஜூரோங் பாயிண்ட் அடைந்த பிறகு, ஸ்டார் பக்ஸ் எந்த தளத்தில் இருக்கிறது என ஏற்கனவே இணையத்தின் மூலம் கண்டறிந்து வைத்திருந்ததால் , வேகவேகமாக கடையினை நோக்கி விரைந்தார்.